2012 மே 8] *[டாக்டர் வி.எஸ். விஜய்]*

அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது. அதன் அடிப்படையில். அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர் அவர்கள்.*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெறவேண்டுமென்ற உயர்ந்த இலட்சியத்தோடு பொற்கால ஆட்சி நடத்திவரும் ஏழையெளிய மக்களின் விடிவெள்ளி மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2011-2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 2 ஆவது முதல் 5 ஆவது வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசால் நிறுத்தப்பட்ட ஈட்டுக் கூலியை வழங்குதல் மற்றும் பட்டு வளர்ப்பு விவசாயிகளுக்கு மானியம் வழங்குதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் 2 அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புற*